| | பத்திரிக்கை வெளியீடு<br>*Reserve Bank of India* |
|---|---|
| தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001 | |
| DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001<br>போன் Phone: 91 22 2266 0502 | இந்திய ரிசர்வ் வங்கி<br>வெப்சைட் Website: www.rbi.org.in<br>இ மெயில் Email: helpdoc@rbi.org.in |

அக்டோபர் 31, 2019

**வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 (ஏஏசிஎஸ்) – பிரிவு 35A இன் கீழ் வழிகாட்டுதல்கள் -சிகேபி கோஆப்ரேட்டிவ் பாங்க் லிமிடெட், மும்பை, மகாராஷ்டிரா**

சிகேபி கோஆப்ரேட்டிவ் பாங்க் லிமிடெட், மும்பை, மகாராஷ்டிரா ஏப்ரல் 30, 2014, தேதியிட்ட UBD.CO.BSD.I.No.D-34/12.22.035/2013-14 உத்தரவின் படி வழிகாட்டுதல் உத்தரவுகளின் கீழ் மே 2, 2014 அன்று வர்த்தகம் முடிவுற்ற நாளிலிருந்து வைக்கப்பட்டது. உத்தரவுகளின் செல்லுபடி காலம் அவ்வபோது நீட்டிக்கப்பட்டு கடைசியாக செப்டம்பர் 25, 2019 தேதியிட்ட DCBR.CO.AID/No.D-19/12.22.035/2019-20 உத்தரவின்படி மறு ஆய்வுக்கு உட்பட்டு அக்டோபர் 31, 2019 வரை நீட்டிக்கப்பட்டது.

இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் – இன் பிரிவு 56 உடன் இணைந்த பிரிவு 35A இன் பிரிவு (1) இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கண்ட வங்கிக்கு வழங்கப்பட்ட ஏப்ரல் 30, 2014 தேதியிட்ட உத்தரவு UBD.CO.BSD.I.No.D-34/12.22.035/2013-14, அவ்வபோது மாற்றியமைக்கப்பட்டு, கடைசியாக அக்டோபர் 31,2019 வரை நீட்டிக்கப்பட்டிருந்த நிலையில், அக்டோபர் 25, 2019 தேதியிட்ட DCBR.CO.AID/No.D-33/12.22.035/2019-20 உத்தரவின்படி நவம்பர் 01, 2019 முதல் ஜனவரி 31, 2020 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு மறு ஆய்விற்கு உட்பட்டு நீட்டிக்கப்படுகிறது என்பதை பொதுமக்களின் தகவலுக்காக தெரிவிக்கிறது.

மேற்கண்ட மாற்றங்களை அறிவிக்கும் அக்டோபர் 25, 2019 தேதியிட்ட DCBR.CO.AID/No.D-33/12.035/2019-20 உத்தரவின் நகல், பொது மக்களின் கவனத்திற்காக வங்கியின் வளாகத்தில் வைக்கப்படும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்கூறிய நீட்டிப்பு மற்றும் மாற்றியமைத்தல், ரிசர்வ் வங்கி, வங்கியின் நிதிநிலையில் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது குறித்து திருப்தி அடைந்ததைக் குறிக்காது.

**யோகேஷ் தயால்**

தைலைம பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2019-2020/1064**